# நிதியியல் அறிவு

IFC International Finance Corporation WORLD BANK GROUP
*Creating Markets, Creating Opportunities*

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

S1-05

## பின்வருவன உட்பட அனைத்து நிதியியல் நடவடிக்கைகள் தொடர்பிலுமான உங்கள் அறிவையும் தேர்ச்சியையும் குறிக்கிறது

# நிதியியல் அறிவு என்பது

- வருமானம் பெறும் வழிகளை அடையாளம் காணல்
- முன்மதியுடன் செலவு செய்தல்
- பாதுகாப்பாகச் சேமித்தல்
- உங்கள் தேவைக்குப் பொருந்தத்தக்க விதத்தில் கடன்களைப் பெறுதல்
- புத்திசாலித்தனமாக முதலீடு செய்தல்

நிதியியல் அறிவு உங்களதும் உங்களது குடும்பத்தினதும் பாதுகாப்பான சிறந்த எதிர்காலத்திற்கு உதவுகின்றதொரு கருவியாகும்

# அமர்வின் உள்ளடக்கம்

- நிதியியல் அறிவு என்றால் என்ன?
- வருமானம், செலவுகளை அடையாளம் காணல் மற்றும் அவற்றின் முகாமைத்துவம்
- எவ்வாறு பாதுகாப்பாகச் சேமிப்பது?
- கடன்களின் வேறுபட்ட வகைகளை அறிமுகப்படுத்துவது
- கடன் வட்டி வீதங்களைக் கணித்துக் கொள்வது
- நிதியியல் கொடுக்கல்வாங்கல்களின் போது உங்களை நீங்களே பாதுகாத்துக் கொள்வது

# எமது நிதியியல் முகாமைத்துவத்தை மேம்படுத்திக் கொள்வோம்



# வருமானம்

- வருமான மூலங்களை அடையாளம் காணல்
- ஈட்டிய வருமானத்தைச் சரியாகக் கணக்கிடுதல்
- மாற்று வருமான வழிகளை அடையாளம் காணல்
- தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல்

# செலவு

- உங்கள் செலவுகளை அடையாளம் காணல்
- அத்தியாவசியமான மற்றும் அத்தியாவசியமல்லாச் செலவுகளை அடையாளம் காணல்
- உங்கள் செலவீனங்களைத் திட்டமிடும் போது முன்மதியுடன் இருங்கள்
- அதன்படி உங்கள் செலவீனங்களை முகாமைப்படுத்துங்கள்
- தேவையற்ற செலவுகளைக் குறைத்தல்
- தொடர்ச்சியாக மீளாய்வு செய்தல்

# வருமானத்தினையும் செலவீனங்களையும் பதிவு செய்வோம்

| திகதி | நடவடிக்கை | வருமானம் | செலவு | நாள் இறுதியில் மொத்தச் சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| நாள் 1 | வருமானம் | | | 65,000- 24,000 |
| | சம்பளம் | 65,000 | | |
| | வியாபாரம் | - | | |
| | | | | |
| | செலவினம் | | | |
| | உணவு | | 19,000 | |
| | பாடசாலை வான் | | 5,000 | |
| | | | | |
| | மொத்தம் | 65,000 | 24,000 | 41,000 |
| | | | | |
| நாள் 2 | | | | 41,000- 12,200 |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | செலவீனம் | | | |
| | குத்தகைத் தவணைப் பணம் | | 12,000 | |
| | பிள்ளைகளுக்கு இனிப்பு | | 200 | |
| | | | | |
| | மொத்தம் | | 12,200 | 28,800 |

# புத்திசாலித்தனமாக முதலீடுகளை மேற்கொள்வதிலுள்ள நன்மைகள்

- நிதியியல் இலக்குகளை அடைவதற்கான இயலாற்றல்
- உங்களின் நிதியியல் பலத்தை மேம்படுத்த முடியும்
- வியாபாரத்தை அபிவிருத்தியுறச் செய்யலாம்
- உங்கள் கனவுகளை நனவாக்கிக் கொள்ளலாம்
- நிதியியல் ரீதியில் சுயாதீனமுடையவராக மாறலாம்
- மற்றவர்களுக்கு உதவலாம்
- உங்களின் ஓய்வுகால வாழ்வைத் திட்டமிடலாம்

நீங்கள் எங்கே சேமிக்கலாம்?

# நாம் பணத்தைச் சேமிக்கக் கூடிய நிறுவனங்கள்

- இலங்கை மத்திய வங்கியில் பதிவுசெய்து கொண்டுள்ள உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்
- இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள உரிமம்பெற்ற வங்கியல்லாத நிதியியல் நிறுவனங்கள்

- கிராமிய வங்கி
- கூட்டுறவுச் சங்கங்கள்
- சமுர்த்தி / திவிநெகும வங்கிகள்
- விவசாயச் சங்கங்கள்

- உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள்
- உரிமம்பெற்ற அரச சார்பற்ற நுண்பாக நிதி நிறுவனங்கள்

02

சேமிப்பிற்காக
நிறுவனமொன்றைத்
தெரிவுசெய்யும் போது
பரிசீலனையில் கொள்ள
வேண்டியவை யாவை?

சேமிப்பதற்காக நீங்கள் தெரிந்தெடுக்கும் நிறுவனம்

- உயர் நம்பிக்கை கொண்டதாக
- குறைந்த இடர்நேர்வுடையதாக
- அதிக நன்மைகளைத் தருவதாக

இருத்தல் வேண்டும்

ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற நிறுவனங்கள் கடுமையான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளினால் நிருவகிக்கப்படுவதனால் அவை மிகப் பொருத்தமானவையாகவும் பாதுகாப்பானவையுமாக இருக்கின்றன

நீங்கள் சேமிக்கத்
தெரிந்தெடுக்கும் நிறுவனமும்
அங்கு சேமிக்கப்படும் உங்கள்
பணமும் பாதுகாப்பு
மிக்கனவா?



## நீங்கள்

இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமறைப்படுத்தப்படும் நிறுவனமொன்றில் சேமிப்புகளை மேற்கொண்டால் அச்சேமிப்புகள் பாதுகாப்பானவையாகக் காணப்படும்

## ஏன்?

ஏனெனில் இலங்கை மத்திய வங்கி அதனால் உரிமம் வழங்கப்பட்ட நிறுவனங்களை ஒழுங்குமறைப்படுத்தி மற்றும் கண்காணித்து வருகின்றது

நீங்கள் இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமறைப்படுத்தப்படும் வங்கிகள் அல்லது நிதியியல் நிறுவனங்களில் சேமிப்பை மேற்கொண்டால் உங்கள் சேமிப்பு தொடர்பான வைப்பு உயர்ந்தபட்சமாக ரூ.1,100,000 வரையிலான காப்புறுதித் தொகையொன்றின் மூலம் பாதுகாக்கப்படுகின்றன.


# நீங்கள் சேமிப்பதற்கான இடமொன்றைத் தேடுகின்றீர்களா?



சேமிப்பதற்கு முன்னால் நீங்கள் பரிசீலனையில் கொள்ள வேண்டிய விடயம்

- நீங்கள் சேமிப்பதற்கு தெரிவுசெய்த இடத்தின் உறுதித்தன்மை
- வருடாந்த பயனுறு வட்டி வீதம்
- காலம் - உங்கள் குறிக்கோள்களுடன் சேமிப்புக் காலத்தைப் பொருந்தச் செய்தல்
- கவர்ச்சிகரமான சந்தைப்படுத்தல்களினால் முட்டாளாக வேண்டாம்

# உங்கள் பணத்தினை வீணாக்குவதற்கு முன்னர் சிந்தியுங்கள்....



# நீங்கள் ATM அட்டையைப் பயன்படுத்துவதன் மூலம்...

- எந்நேரத்திலும் பணத்தை எடுப்பனவு செய்யலாம்
- வங்கிக் கருமபீடத்தில் வரிசையில் காத்திருப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம்
- நாட்டின் எந்தவொரு இடத்திலும் கொடுக்கல்வாங்கல்களைச் செய்யலாம்
- கணக்கு மீதியை இலகுவாக அறிந்து கொள்ளலாம்
- படிவங்களை நிரப்புவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்
- இலகுவாக எங்கும் கொண்டு செல்லலாம்
- அவசர நிலைமைகளில் நீங்கள் வேறொரு வங்கியின் இயந்திரத்திலிருந்தும் பணத்தை பெறலாம். இதற்கு ஏற்படும் செலவு நீங்கள் வங்கிக்கு செல்ல ஏற்படும் செலவிலும் குறைவானதாகும்.

# ATM அட்டையைப் பயன்படுத்தும் போது...

- உங்கள் தனியாள் அடையாள இலக்கத்தினை தனியாக வைத்துக் கொள்வதனை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமாகும். இதனை வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ளக்கூடாது
- ATM அட்டை மற்றும் தனிப்பட்ட அடையாள இலக்கம் என்பவற்றை ஒரே இடத்தில் வைத்திருக்கக்கூடாது.
- ATM அட்டை தொலைந்தால் உடனடியாக வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.
- சாத்தியமானவிடத்து பாதுகாப்பிற்காக SMS சேவை அறிவித்தல்களை நீங்கள் செயற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## குதிப்பதற்கு முன் சிந்தியுங்கள்




- கவர்ச்சிகரமான வார்த்தைகளின் பின்னாலுள்ள நிபந்தனைகள் எவை?
- வாக்குறுதி வழங்கப்பட்ட உரிய நன்மைகளை உண்மையில் எவ்வாறு பெறுவது?



# கடன்கள்

# கடன்களின் வகைகள்



கல்விக் கடன்கள்

வியாபாரக் கடன்கள்

அவசரகாலக் கடன்கள்

வீடமைப்புக் கடன்கள்

வாகனக் கடன்கள்

விவசாயக் கடன்கள்

ஈட்டுக் கடன்கள்

தனிப்பட்ட கடன்கள்

# கடனுக்காக உத்தரவாதம் அளிக்கும் போது பரிசீலனையில் கொள்ள வேண்டிய விடயங்கள்

- கடன்பெற்றவரின் கடனைத் திருப்பிச் செலுத்தும் இயலுமை
- கடன்பெற்றவருடனான தொடர்புகள்

**கவனத்திற்குரியது**

கடன்பெற்றவர் மற்றும் உத்தரவாதமளிப்பவர் ஆகிய இருவரும் கடன் மீளச்செலுத்தப்படும் வரை சம பொறுப்புமிக்கவர்களாவர்

வீடமைப்புக் கடனை விட தனிப்பட்ட கடனுக்கான வட்டி வீதம் உயர்வாக இருக்கும்

வீடமைப்புக் கடனுடன் ஒப்பிடுகையில் தனிப்பட்ட கடன்களைக் குறைந்த காலத்தில் மீளச் செலுத்த வேண்டியிருக்கும்

தனிப்பட்ட கடன் தொகை வீடுகளைத் திருத்துவதற்குத் தேவைப்படும் முழுத் தொகையினையும் பூர்த்திசெய்யாது

தனிப்பட்ட கடன்கள் உத்தரவாதிகளைத் தேவைப்படுத்தும்

# வட்டி வீதம்

# வட்டி வீதங்கள்

## மாறா வட்டி வீதம்

வட்டி வீதம் நிலையானது என்பதுடன் வட்டி ஆரம்பக் கடன் தொகையின் மீதுகணிக்கப்படுகிறது

## குறைவடைந்து செல்லும் மீதி வட்டி வீதம்

ஒவ்வொரு காலப்பகுதிக்குமான எஞ்சியுள்ள கடன் மீதியின் மீது வட்டி கணிக்கப்படுகிறது

குறைவடைந்து செல்லும் மீதி வட்டி வீதம் = மாறா வட்டி வீதத்தின் இருமடங்கு - 2

## பயனுறு வட்டி வீதத்தைக் கணித்தல்

$$\text{பயனுறு வட்டி வீதம்} = \frac{\text{கடனுக்காக ஏற்பட்ட மொத்தச் செலவினங்கள் (வட்டி மற்றும் வேறு கட்டணங்கள்)}}{\text{வெளிநின்ற சராசரி முதல் தொகை}} \times 100$$

$$\text{வெளிநின்ற சராசரி முதல் தொகை} = \frac{\text{வெளிநின்ற முதல் தொகையின் மொத்தம்}}{\text{கடன் தவணைகளின் எண்ணிக்கை}}$$

# வட்டி வீதம்

பெயரளவு
வட்டி வீதம்
(குறைவடைகின்ற
மற்றும் மாறா)

கடனின் மீது
விளம்பரப்படுத்தப்பட்ட
அல்லது கூறப்பட்ட வட்டி
வீதம்

பயனுறு
வட்டி
வீதம்

கடனுக்காக நீங்கள்
செலுத்த வேண்டிய
உண்மையான வட்டி
வீதம்

# குதிப்பதற்கு முன்னர் சிந்தியுங்கள்

காண்பதை விட உற்றுநோக்குவது வித்தியாசமானது

- விளம்பரப்படுத்தப்பட்ட வட்டியைத் தான் நீங்கள் செலுத்த வேண்டியிருக்குமா?
- மறைமுகக் கட்டணங்கள் ஏதுமுண்டா? ஆமெனில், உண்மையில் நீங்கள் செலுத்த வேண்டிய தொகையை இவை எவ்வாறு பாதிக்கும்?
- நீங்கள் உண்மையில் செலுத்த வேண்டிய தொகையை நியதிகள் மற்றும் நிபந்தனைகள் எவ்வாறு பாதிக்கும்?
- பயனுறு வட்டி வீதமென்றால் என்ன என்பது பற்றி உங்களுக்குத் தெரியுமா?
- தற்பொழுது வட்டி வீதங்களை ஒப்பிடுவதிலுள்ள முக்கியத்துவம் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

# கடன்பாடுகள் தலைவலிக்கு வழிவகுக்காமல் இருப்பதற்கு

## பெறுங்கள்

- ✔ முதலீட்டிற்காக மாத்திரம்
- ✔ சரியான நேரத்தில் சரியான தொகை
- ✔ தாங்கக்கூடிய வட்டி வீதத்தில்
- ✔ முறைசார்ந்த நிதியியல் நிறுவனங்களிடமிருந்து மாத்திரம்

## வேண்டாம்

- ✘ நுகர்வுக்காக கடன் எடுக்க
- ✘ மீள்கொடுப்பனவினைத் தாமதிக்க
- ✘ கடன் பணத்தினைத் தவறாகப் பயன்படுத்த
- ✘ சந்தைப்படுத்தல் தந்திரங்களில் வீழ்ந்துவிட

CRIB இற்கு உங்களைத் தெரியும்

உங்களுக்கு CRIB பற்றி தெரியுமா?

## இலங்கை கடன் தகவல் பணியகம்

- கடன் வழங்கும் நிதியியல் நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட கடன்கள் தொடர்பான பதிவேடுகளைப் பேணுகிறது.

- அத்தகவல்கள் யாருடன் தொடர்பானவையோ அத்தகைய பங்குடமையாளர்கள், கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் கடன்பாட்டாளர்களுக்கு கோரிக்கையின் பேரில் கொடுகடன் அறிக்கைகளை வழங்குகிறது.

நீங்கள் ஏதேனும் கொடுகடன் வசதியைப் பெற்றிருப்பின் அல்லது கடனொன்றிற்கான உத்தரவாதியாக இருப்பின் உங்கள் பதிவேடுகள் CRIB இல் இருக்கும்.

நீங்கள் CRIB இல் ஆரோக்கியமான கொடுகடன் பதிவேட்டொன்றினை வைத்திருப்பின் அது புதிய கடன்களை எடுப்பதனைச் சுலபமாக்கும்.

# உங்கள் கொடுகடன் புள்ளி

CRIB உங்கள் கொடுகடன் நடத்தையினைப் பிரதிபலிக்கின்ற கொடுகடன் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கொடுகடன் புள்ளியினை வழங்குகிறது.

## கொடுகடன் புள்ளி எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

கொடுகடன் புள்ளி என்பது 250 இலிருந்து 900 வரையிலான மூன்று டிஜிட்டல் இலக்கங்களைக் கொண்டதாகும்.

உதாரணம் உரிய நேரத்தில் கிரமமான கடன் மீள்கொடுப்பனவுகளுக்கான புள்ளி 900 ஆகும்

உயர் கொடுகடன் புள்ளி = தாழ்ந்த கொடுகடன் இடர்நேர்வு

# உங்கள் கொடுகடன் அறிக்கையை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா - Report ?

நீங்கள் கொடுப்பனவொன்றினைச் செய்வதன் மூலம் பின்வரும் வழிகளில் பெற்றுக் கொள்ளலாம்

- CRIB வாடிக்கையாளர் மையத்தில் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்
- உங்கள் வங்கியூடாக கோரிக்கை விடுப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்
- இணைவழி மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

- இது சிறந்த கொடுகடன் நியதிகளை நீங்கள் பெற்றுக் கொள்வதை அனுமதிக்கும்
- மிகையான கடன் சுமைக்குட்பட்டுள்ள அல்லது கடன் செலுத்தாத ஒருவருக்கு உத்தரவாதியாக நீங்கள் கையெழுத்திடுவதிலிருந்தும் உங்களைப் பாதுகாக்கிறது

கொடுகடன் தகவல் பணியகம்
இல.25, வையிற்றவேஸ் கட்டடம்
சேர் பாரன் ஜெயதிலக்க மாவத்தை
கொழும்பு 01

0112 131 131



# ஏன் SMS?

- உங்களின் பெறுமதிமிக்க நேரத்தை மீதப்படுத்தலாம்.
- உங்கள் வங்கிக் கணக்கில் இடம்பெறும் எந்தவொரு கொடுக்கல்வாங்கலையும் அதேநேரத்தில் அறியும் வாய்ப்பு
- நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைப் பணம் பற்றி இது உங்களுக்கு அறியத் தருகிறது
- உங்கள் நிதியியல் நிறுவனங்களிலிருந்து உங்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சேவைகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் கிரமமாக இற்றைப்படுத்தப்படுகின்றன

Cash withdraw Acc no ******89 location: Ragama Railway ATM.LKA 19500.00. AV Bal LKR 10031.98. Date;28.11.2019. time 17.56 hot line 0712345678

நீங்கள் பணத்தினை எடுப்பனவு செய்யுமிடத்து

A Transaction for LKR 15000.00 has been credited to Acc no ******89 on 20/11/2019 14: 37. AV Bal LKR 27565.98. Date hot line 0712345678

நீங்கள் காசினை வைப்புச் செய்யுமிடத்து

Purchase Debit account no ******89 location: Ragama cargills .LKR 1955.00. AV Bal LKR 12565.98. Date; 26.11.2019. Time 17.56 hot line 0712345678

நீங்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யுமிடத்து

நீங்கள் எதற்காக கையெழுத்திடுகின்றீர்கள் என்பதனைச் சரியாகத் தெரிந்துகொண்டிருக்கின்றீர்கள் என்பதனை உறுதிப்படுத்துங்கள்

நீங்கள் கையெழுத்திடும் போது கவனத்துடன் இருப்பது அவசியமாகும்

பாய்வதற்கு முன் சிந்தியுங்கள்

ஒருமுறை கையெழுத்திட்டதன் பின்னர் அதனை மாற்றவே முடியாது. இது கல்வெட்டில் எழுதப்பட்டதனைப் போன்றது!

நீங்கள் எதனைச் சரிபார்த்துக் கொள்ளுதல் வேண்டும்?

மொழி உங்களுக்கு விளங்குகின்றதா?
நிறுவனத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் யாவை?
நிபந்தனைகள் எதனையும் நீங்கள் மீறினால் அதன் விளைவுகள் என்ன?

# உங்களது சேமிப்பு தொடர்பில் உங்களுக்கு ஏதேனும் பிரச்சனை இருக்குமாயின்




முகாமையாளரைச் சந்தியுங்கள்

பிரச்சினைக்குத் தீர்வு

பிரச்சினைக்குத் தீர்வு இல்லை

நிதியியல் குறைகேள் அதிகாரி

நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

# உங்கள் கடன் உங்களுக்கொரு பிரச்சினையாக இருந்தால்




முகாமையாளரைச் சந்தியுங்கள்

பிரச்சினைக்கு தீர்வு

பிரச்சினைக்கு தீர்வு இல்லை

கடன் நிவாரண சபை பொரளை

பிரச்சினைக்குத் தீர்வு

நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி

நிதியியல் குறைகேள் அதிகாரி

# நிதியியல் வாடிக்கையாளர் தொடர்புகள் திணைக்களம்

- 94 11 247 7966
- 94 11 247 7744
- இல.30, சனாதிபதி மாவத்தை,
  கொழும்பு 01
- fcrd@cbsl.lk